Subscription.
Inland: Rs. 50/- per year.
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q/J/104/News/89
Established: 1841: A Christian Weekly: Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 07 April 1989 No. 14
...GHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

UNDELIVERED ISSUES
Please re-address
all undelivered issues of
The
MORNING STAR'
To. The Manager,
"Morning Star"
182, First Cross Street,
JAFFNA.

For the Record:,

## The New Cabinet Ministers (22).

1. H. E; *R. Premadasa*:-
Buddha Sasana.
H. E; *R. Premadasa*:-
Policy Planning and Implementation.
H. E; *R. Premadasa*,
Defence.
2. *Wijepala Mendis*:-
Transport and Highways.
3. *A. C. S. Hameed*:-
Higher Education, Science and Technology.
4. *D. B. Wijetunge*:-
Prime Minister and Minister of Finance.
5. *Gamini Dissanayake*:-
Plantation Industries.
6. *M. Vincent Perera*:-
Justice and Parliamentary Affairs.
7. *Lalith Athulathmudali*:-
Agriculture, Food and Co-operatives.
8. *Festus Perera*:-
Power and Energy.
9. *Thondaman*:-
Textiles and Rural Industrial Development.
10. *Ranil Wickramasinghe*:-
Industries and Leader of the House.
11. *Dr. Ranjit Attapattu*:-
Labour and Social Welfare.
12. *P. Dayaratne*:-
Lands, Irrigation and Mahaweli Development.
13. *Joseph Michael Perera*:-
Fisheries and Aquatic Resources.
14. *M. J. M. Lokubandara*:-
Education, Cultural Affairs and Information.
15. *Alick Aluvihara*:-
Posts and Telecommunication,
16. *C. Nantha Mathew*:-
Sports and Youth Affairs.
17. *A. R. Mansoor*:-
Trade and Shipping.
18. *U. B. Wijekoon*:-
Public Administration, Provincial Councils and Home Affairs.
19. *Mrs. Renuka Herath*:-
Health and Womens' Affairs.
20. *A. M. S. Adikari*.- Tourism.
21. *Sirisena Cooray*:-
Housing and Construction.
22. *Ranjan Wijeratne*:-
Foreign Affairs.

## DIOCESAN COUNCIL SESSIONS — 1989.

*Live Issues.*

The immensity of the task undertaken by the Church and the growing need of each individual in the Church to participate in its development, evangelization and spiritual growth, was felt throughout each minute of the Council Sessions, this March.

The presence of Rev. Paul Clayton from the U.C.B.W.M. at the meetings, reminded us of the missionaries who ventured out to serve in our peninsula many years ago. Their long, hard sea voyages accompanied by sickness and diseases, their seperation from their loved ones in America-bidding farewell not knowing whether they would ever see them again - their willingness to serve amidst a hostile people immersed in traditions and averse to any change or alteration in their way of life. Tremendous courage and love! We are forever indebted to them.

On celebrating the 10th anniversary of work started beyond Elephant Pass, instances when Jesus Christ our Lord placed equal importance to fulfilling man's bodily needs as to preaching and prayer, came alive in my mind. The feeding of the five thousand, curing the leper, the blind and the sick and the wedding at Cana. The good news was spread through these acts as well as sermons and teachings. Establishing a society devoid of hunger and poverty is complementary to prayer and preaching - spreading the good-news.

Another pressing thought that prevailed throughout the sessions was the need for us as individuals to strengthen the church with our worship and participation. Each member of the Church is called upon to keep worship alive and anew not only by mere presence at services but also by continued active involvement in the activities of the church.

The women at the Council Sessions, looked with dismay at the place allotted to woman in society. Her inability to contribute fully towards the growth and advancement of her community, owing to the heavy burden of household chores which she continues to perform single-handed and also the total reluctance and refusal of man to accept her as copartner in his endeavours towards the upliftment of society was pointed out. If she appears to stand shoulder to shoulder with man, it is not because he has fully accepted woman as his equal but because he is compelled to follow the trend of the modern world. The necessity for man to accept woman as an equal participant in the life of the Church and the community, was acutely felt by those present, at Council Sessions.

— Shiranee Mills.

*At Rest,*

## Mr. D. G. JOSHUA.

The death occurred on 2-4-89 of Mr. D. Gunaratnam Joshua, age 93, the oldest member of the Uduvil Church.

The Funeral Service was held at the residence of Mr. Manoharan Joshua, his son at Uduvil on 3-4-89. Rev. D. R. Ratnasingam conducted the Service. Mr. A. R. Thambiappah, Worker in the J.D.C.S.I. paid the tribute. The remains were interred in the Uduvil Church burial grounds.

Mr. Gunaratnam Joshua, on his return from Malaya in 1933 was employed in various capacities in the private sector. He was an ardent churchman and for eight consecutive years was Deacon at the Uduvil church.

He leaves behind, a son and two daughters.

## 200th DEATH ANNIVERSARY OF Mr. WILLIAM SITHAMPARAPPILLAI NEVINS



Sithamparappillai Nevins hailed from the village of Sanguvely. He was born in the year 1820. His father was Mr. Muthucumaru Sithamparappillai.

He entered the Batticotta Seminary in 1832 and graduated in 1840. He was a Translater for six years and later joined the staff of the Seminary. In 1853 he went to Madras where he collaborated with Winslow - the missionary in bringing out the Tamil — English Dictionary.

He returned to Jaffna in 1860 and served as the Headmaster of the Wesleyan Mission Central School for nearly 26 years.

Sithamparappillai's 50 years service as a teacher was cele brated on 10-8-88. The 'Morning Star' of that year has a vivid account of it.

He succeeded Mr. Samuel Grenier soon after as Headmaster of Jaffna Central. He resigned from Central to become Principal of Jaffna Hindu College, which was originally known as New Town School, the School he founded, Sithamparappillai Nevins died on the *19th* of *March 1889*.

His son was the late Nevins Selvadurai, B. A; J. P; M. B. E; the distinguished educationist and statesman who was elected Member of the State Council in 1934 for Kayts.

Foremost among the educational institutions of that time was the Batticotta Seminary (founded 1823) which produced such intellectual giants as Muthucumaru Sithamparppillai Nevins, Arnold Sathasivampillai, Daniel Harold Vyramuthu Visvanathapillai and Wyman Kathiravetpillai.

— M. Sinnathamby.

## OBITUARY.

Dr. Mrs. Annama Moses expired in Neyyattinkara, Kerala, South India on the 12th of February 1989. Dr. Mrs. Moses (Nee John) served for a few years at the Mc Leod Hospital, Inuvil and was also Acting Director on the retirement of Dr. Mrs. Kurien, who incidentally was an aunt of Dr. Mrs. Moses. On retirement from service in the Diocese, Dr. Mrs. Moses served in a Mission Hospital in Malaipuram, South India and later she was a private practitioner in Neyyattinkara where she settled down in her own home. Dr. Mrs. Moses hails from a respectable and highly educated strata of the Syrian Orthodox Christian community in Kottayam, Kerala. She leaves behind her husband Mr. Abraham Moses, who for more than three decades was the Manager of the Lankabhimani Press owned by the late Rev. J. W. A. Kadirgamar at Chavakachcheri. Mr. Moses it may be remembered was an active member of the Chavakachcheri Church, an effective Lay preacher and also an author of several Tamil lyrics some of which are now printed in the Diocesan Hymn Book. His address is as follows: —

"Santhapathi"
Varhuthoor,
P. O. Neyyattinkara
Kerala,
South India.

NAVAJEEVANAM.
THIRTIETH
ANNIVERSARY—
1st May 1989.

*A Service of Thanksgiving with Holy Communion will be held at 9. a. m. followed by a Public Meeting, Exhibition and sale of products ending up with a Fellowship Lunch.*

*ALL ARE WELCOME.*
— Director.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதய தாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது.
நீதி ஜனத்தை உயர்த்தும் : பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்.

மலர் 149 07 - 04 -1989 [இதழ் 14


## சிந்தனை 11.

### சற்று அப்புறம் போங்கள்.

*மத்தேயு 26: 36 - 46.*

இறுதி நாளை அண்மித்துவரும்நமது மீட்பரும் காப்பவருமாகிய கிறிஸ்து தனக்கன்பான திருத்தொண்டர்கள் மூவருடன் அமைதியான இடம் நோக்கிச் சென்றார். அங்கு, தந்தையாம் இறைவனிடம் பெலம் வேண்டி நின்றார்.

தந்தையின் உறவில் தரித்திருக்கச் சென்ற மைந்தன், தன் அன்பிற்குரிய திருத்தொண்டர்களை ஓரிடத்தில் விட்டு விட்டு, சற்று அப்புறம் சென்று, தனிமையில் தன் தந்தையுடன் உறவு கொண்டு, தொடரும் தன் இறுதிப்பணியில் தந்தையின் துணைவேண்டி நின்றார்,

உலகியல் வரலாற்றில் பல்வேறுபட்ட துன்பங்களைக் கண்டு அனுபவிக்கும் நாமும் நமது சமுகமும் புதுவாழ்வு காணவேண்டுமானால், நமது அன்பிற்குரியவர்களையும் அவர்களிடம் நாம் வைத்த பாச உணர்வுகளையும் விட்டு விட்டு, சற்று அப்புறம் போயே ஆகவேண்டும். போகாது இருக்கும் வரை புதிய தரிசனத்தைக்காண்பது அரிது.

நமக்கு வரும் சோர்வுகளிலிருந்து விடுபட்டு உறுதியும், உரம்கொண்ட துணிவும் பெறவேண்டுமானால், நம்மைச்சோர்வு படுத்தும் சூழலில் இருந்து விடுபட்டு, சற்று அப்புறம் போகவேண்டியது அவசியமான ஒன்று. அவசியமான ஒன்றை, கிறிஸ்து செயற்படுத்தினார். அச்செயற்திட்டத்தைச் செயற்படுத்த விரும்பியவர் சற்று அப்புறம் வந்து நீங்களெல்லோரும் என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள் என்று அறைகூவல் விடுகின்றார்.

குழப்பங்கள் நிறைந்த காலங்களிலும், தேவைகள் அதிகரிக்கும் நேரங்களிலும், பிரிவினைகள் பேரம் பேசும் இந்த நாட்களிலும்,என்ன செய்வேன் என்று நீ நிலைகுலையும் போது வரும் செய்தி, "இவற்றிலிருந்து விடுபட்டு, சற்று அப்புறம் வந்து, என்னிடம் ஆலோசனையையும் அறிவுரையையும் பெற்றுக் கொண்டு, மறுபடியும் உலகிற்குள் போங்கள்" என்பதுதான்.

மீட்பின் பணியின் இறுதியான குழப்பம் நிறைந்த காலகட்டத்தில், தன்னுடன் பணிபுரிந்த திருத்தொண்டர்களை ஒரு இடத்தில் விட்டுவிட்டு, சற்று அப்புறம் சென்று தந்தையாம் இறைவனிடம் உறவுகொண்டு, வலுவான பெலம் பெற்று மறுபடியும் உலக வரலாற்றில் பங்கு கொண்டார். தன் துன்பத்தின் பாதையில் வெற்றியும் கொண்டார். வெற்றிகண்ட கிறிஸ்து, என் வழி தொடருங்கள் வாழ்வில் வெற்றிகாணுங்கள் என்று அழைக்கின்றார். அழைப்பைத் தொடர்ந்து சற்று அப்புறம் சென்று தனிமையில் இறைவனோடும் இறைமகன் இயேசுவோடும் தூய ஆவியோடும் இணைந்து, உறவு என்ற சொல்லில் உண்மையைக் கண்டு, கிறிஸ்துவின் மீட்பின் பணியில் நீங்களும் பங்காளிகள் ஆகுங்கள்.

## சிந்தனை 12.

### ஏன் இந்தக் கண்ணீர்?

*யோவான் 11: 1—35.*

"தம் கண்ணின் நீர் வார்த்துக் கால் கழுவா நின்று" என்று கூறுகின்றது நளவெண்பா.

மன்னன் நளன் புட்கரனுக்கு நாட்டைப்பறி கொடுத்து விட்டு,அரியணை இழந்து-தன்மக்களை இழந்து, காடு சென்ற காட்சி கண்டபோது மக்கள் நெஞ்சம் நெகிழ்ந்தது. நளமன்னன் இல்லாத ஆட்சி எப்படி மலரப்போகின்றது? காய்ந்து கருகி உதிரப்போகின்றதே என்ற சிந்தனை மக்களைச் சந்தித்த போது, மக்களின் கண்கள் குளமாகின. குளத்தில் இருந்து வழிந்த நீர் அவர்களின் கால்களைக் கழுவியது, என்று இலக்கிய நயம்பட மக்களை விட்டுப் பிரியும் மன்னன் பிரிவை "ஆருயிர்த் தாயே" என்று ஆரம்பிக்கும் பாடலின் வழி நின்று புகழேந்திப்புலவர் விமர்சிக்கின்றார். மன்னனுக்காய் மக்கள் அழுதார்கள். இது என்றுமே நடப்பது. இச்செயற்பாடு உலகியல் சார்ந்த ஒன்று.

நடவாத, நடக்க முடியாத ஒன்று தான், பெத்தானியாவின் இல்லத்தில் நடந்தது. அரசர்க்கெல்லாம் அரசனை மன்னன் தாவீதின் வழி வந்த யூதர்களுடைய இராசன், அனைத்துலக மீட்புக்காக, யோர்தான் நதிக்கரையில் அபிஷேகம் செய்யப்பட்ட தந்தையாம் இறைவனின் தாசன், பெத்தானியாவின் இல்லத்தில் அழுதார் என்பதே.

இப்பகுதியில் உதிர்த்தப்பட்ட கண்ணீரை,உலகியல் சார்ந்து நோக்குமிடத்து, நமது சிந்தனைக்குட்படுவது.

"கொட்டப்பட்டது கண்ணீர்
நண்பன் லாசருக்காய்
விடப்பட்டார்கள்
இருபெண்கள் அனாதைகளாய்
உதிர்த்தார் தம் கண்ணீர்
இவ்விருவருக்காய்
மட்டற்ற அன்புவைத்த தன்
அன்பர்க்கா இச்சோதனை
தொட்டுப்பார்த்தார் தன்
இதயம் வெடித்தது
சிந்தியது கண்ணீர்" என்று.

கிறிஸ்து பிரான் சிந்திய இக்கண்ணீரைச் சிறப்பித்து- அருள் நாதரின் அன்பு, கரிசனை, ஈடுபாடு பற்றி வேதனைப் படுவோர்க்கு எடுத்துக்கூறி மக்களை ஆறுதல் படுத்திவிடலாம். இது, ஒரு பக்கச் சிந்தனை. யோவான் 11: 33 ஆம் வசனத்தின் படியும் அதற்கு முன் நடந்த உரையாடல்களின்படியும் உலகநாதர் உதிர்த்த கண்ணீருக்கு வேறு கருத்தும் உண்டு. துணையாக இருந்த ஆண் துணையும் லாசருவின் மரணத்தால் இழக்கப்பட்டுவிட்டது. இனிமேல் இந்த இரண்டு பெண்களின் தனிமையை நிரப்புவது யார்? ஏன் எங்கள் இருவருக்கும் இத்துன்பம்? இக்கேள்விகள் மார்த்தாள், மரியாளின் எண்ண அலைகளாய் இருந்திருக்க இடமுண்டு.

இச்சந்தர்ப்பத்தில் மரியாள், மார்த்தாள் இருவரும் நம்பிக்கை தளர்ந்து நிற்கிறார்கள். எவ்வளவு பலமான விசுவாசமானாலும் துன்பத்தின் தாக்கம் வந்து சந்திக்கும் போது, சிறிது அசைந்து போவது இயல்பு. [illegible] விசுவா சி[illegible]

விசுவாசிகள் அசைவுபட்டுக் குழம்பும் போது அவர்களையும் அவர்களின்பற்றுறுதியையும் பெலப்படுத்த மறுபடியும் உதவுவது தான், சபையின் பணியாக அமைய வேண்டும்.

இச்செயற்பாடு, பெத்தானியாவின் இல்லத்தில் காணப்படவேயில்லை. இவ்வில்லத்தில் ஒரு சபை கூடியிருந்தது. இது யூத சபை; உயிர்த்தெழுதலில் நம்பிக்கை உள்ள சபை. இந்த இல்லமும் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை உள்ள இல்லம். இந்த இல்லத்திலும் இங்கு கூடிய சபையினிடத்தும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையைக் காணாத நமது ஆண்டவர் ஆவியிலே கலங்கினார். கண்ணீர் விட்டார்.

கருத்து இல்லாத சமயக்கோட்பாடுகள் சமய நம்பிக்கைகள் ஒரு புறம்; வாழ்வியல் மறுபுறம். இரண்டும் இரண்டு திசைகள். இத்தகைய வாழ்வு வேண்டுமான ஒன்றல்ல. வாழ்வியலும் இறையியலும் இணைந்த ஒரு உலகவியல் வேண்டும் என்று விரும்பியவர், இந்த இல்லத்தில் இறையியல் சார்ந்த எதையும் காணாதபோது கண்ணீர் விட்டார் என்று கூறுவதற்கும் சான்றுகள் உண்டு.

மொத்தத்தில், மனித உடலில் இருந்த நமது மீட்பர், மனித வேதனைகளைச் சுமந்து நின்ற காரணத்தால், அனாதைகளாக்கப்பட்ட இவர்களுக்காக அழுதார். இறையியல், இறைமகன் இயேசுவைச் சுமந்து நின்ற காரணத்தால் நம்பிக்கையும் விசுவாசமும் வெறும் சொற்களாக இருப்பது கண்டு அழுதார் என்று கூறும் போது, இரண்டு பக்கங்களிலும் உண்மை உண்டு.

பிரியமானவர்களே, மனித துன்பத்தில் பங்கு ஏற்பவர் இறைவன். துன்பப்பட்டவர், துன்பப்படுபவர்களின் வேதனையை அறியாது இருக்கவே மாட்டார். இதே காலத்தில் உயிரோடு எழுந்தவர், நம்மை, நிகழ்காலத்திலும் உயிரோடு எழுக எழுக என்று அழைப்பார். இந்த விசுவாசம் உயிர்பெற்று இருப்பது கண்டால் மகிழ்ச்சி அடைவார். இன்றேல் நமது ஆண்டவர், விசுவாசம் இல்லாத நம்மையும் சபைகளையும் பார்த்துக் கண்ணீர் சிந்துவார். அவரின் கண்ணீர். துடைக்க, இறையியலும் வாழ்வியலும் இணைந்த உலகவியல் ஒன்றை உருவாக்குவோம். வாருங்கள்- சிந்தியுங்கள்- செயல்படுங்கள்.

❁ ❁ ❁ ❁

## மணி மொழிகள்.

### இறைவனை நோக்கிப்பார்:

நாம் பணிசெய்வது மட்டுமல்ல செபிக்கவும் வேண்டும். கப்பலோட்டி, கடல் வழியாய்த் தன் கப்பலை ஓட்டும்பொழுது, வழியை அறியும்படி விண்மீன்களைப் பார்ப்பதுபோல, கிறிஸ்தவர்களாகிய நாமும் நம் அன்றாட பணிகளைச் செய்துவரும் பொழுது, இறைவனை நோக்கிப் பார்த்து நம் முயற்சிகளை ஆசீர்வதிக்கும்படி அவரை வேண்டுக் கொள்ள வேண்டும்.

### சீடரில் இருவகை.

சாத்தான் தன் சீடரை, அவர்கள் சோம்பலாய் இருக்கும் பொழுது தெரிந்தெடுக்கிறான். ஆனால் கிறிஸ்து தம் சீடரை, தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டோ, அவற்றைக் கடலில் வீசிக்கொண்டோ தம் வேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருக்கும் பொழுது தெரிந்தெடுக்கிறார்.

### சாத்தானின் பட்டறை.

சோம்பேறியின் மூளை, சாத்தானின் பட்டறை. சுறுசுறுப்புள்ளவன் ஒரு பிசாசினால் மட்டுமே அல்லல்ப்படுகிறான். சாத்தான் சுறுசுறுப்புள்ளவனையும் சோதிக்கிறான். ஆனால் சோம்பேறி சாத்தானைச் சோதிக்கிறான்.

### நீண்ட பிரசங்கம்.

"சில பிரசங்கிமார் நீண்ட பிரசங்கங்களினால் சபையாரை வதைக்கிறார்கள். மனிதனுக்குள் அமைந்திருக்கும் கவனிக்கும் சக்தி, மிகவும் மென்மையான அம்சமாயிருப்பதால், நீண்ட பிரசங்கம் விரைவில் அச்சக்திக்குச் சோர்வையும் தெவிட்டலையும் உண்டாக்கி விடும்," என்கிறார் மார்ட்டின் லூத்தர்.

❁ ❁ ❁ ❁

### பரிசுத்த வாரம்.

*சென்ற வாரத் தொடர்ச்சி.*

21- 2- 89 பரிசுத்த செவ்வாய் மாலை 4.30 மணிக்கு, எல்லாத் திருச்சபைகளுக்குமான விசேஷ ஆராதனையை, சபை ஊழியன் நடத்த, அளவெட்டிச் சபை ஊழியன் வண. ஈ. சொலமன், "அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (எபேசியர் 2: 22) என்ற இறை வாக்கிலிருந்து அருளுரை வழங்கி "உங்கள் சபையில் சபை ஊழியன் இருக்கிறான். அதனால் நீங்கள் மற்றைய சபைகளின் நிலையை உணராதிருக்கிறீர்கள். எத்தனையோ சபைகளில் ஆராதனை நடத்த ஊழியர் இல்லாதிருக்கிறார்கள். இவ்வேளையில் ஏனைய சபைகளுக்காகவும் நாம் வேண்டுதல் செய்வது நல்லது" என்றும் "சபையில் நம்பிக்கையில்லாது இங்குமங்கும் அலையும் அவிசுவாசிகளுக்கு, சபையினர்தான் நல்வழி காட்ட முடியும்" என்றும் தனது அருளுரையில் தெரிவித்தார்.

22- 8- 89 பரிசுத்த புதன் மாலை 4-30 மணிக்கு, டாக்டர் டானியேல் பூவர் அவர்களுக்கான விசேஷ ஆராதனை நடத்தப்பட்டது. இதில் ஏழாலை மகாவித்தியாலய அதிபர் திரு. தோ. டானியேல் அவர்கள் மிஷனரிமார்களில் ஒருவரான டாக்டர் பூவரின் வருகையால் யாழ். நகரம் பெற்ற நன்மைகளை விளக்கிக் கூறினார். அத்துடன் 26- 3- 86 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்கு, திருச்சபையின் திறந்த வெளியரங்கில், கிறிஸ்து ஜெயந்தி விழாவை முன்னிட்டு, கலை நிகழ்ச்சி இடம்பெற்றது.

❁ ❁ ❁ ❁

### தம் ஆடுகளுக்காகக் கவலைப்படும் போதகர்!

போதகர், தம் சபையாருக்குக் கற்றுக்கொடுப்பதற்கான எல்லாச் சந்தர்ப்பங்களையும் பயன் படுத்திக் கொள்வதிலும், அவர்கள் நலனுக்காகத் தம் சிந்தனைகளைப் பாவிப்பதிலும், இடைவிடாமல், அவர்களுக்காகச் செபித்து, அவர்களின் மேல் அன்பும் இரக்கமும் உள்ளவர்தான் கடவுள் என்பதைக் காட்டுவதிலும், உலகம் பெற்றுக் கொள்ளாத உண்மைகளை ஒப்படைப்பதனால், தம் சுகத்தையும் அமைதியையும் தியாகஞ் செய்வதிலும், தம் உயிரையே அர்ப்பணிக்கிறார், தன் உழைப்பின் மூலம்.

அருமையான நட்புறவுகளை, அவை உண்மைக்கும் நீதிக்கும் எதிராய்ப் போட்டி போட்டுக் கொண்டு நிற்கும் பொழுது, அவர் விட்டுவிடுகிறார். உலகத்திற்குரிய, நிறைவேற்றங்கள் அனைத்தையும் (நியாயமானதைப் பற்றி நினையாமல் காலத்துக் கேற்றதைப்பற்றி நினைக்கும் போது) விட்டுவிடுகிறார்.

தம் மனச்சாய்வுகளை, அவை முற்றிலும் குற்றமற்றவையாய் இருப்பினும் பிறருக்காகத் தியாகஞ் செய்கிறார். பிறரைவெறுப்பதிலும் பார்க்க, அவர்களுக்காகத் தம்மைத் தியாகஞ் செய்துவிடுகிறார். அகந்தைக்கும் சொகுசுக்கும் தன் மந்தை அடிமைப்பட்டு விடாதபடி, நற்செய்திக்குரிய பணிவுக்கும் எளிமைக்கும் உட்படுகிறார்

( தொடர்ச்சி 3ம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரகை ஒளி:-

முதலில் விரைவில் சம்பாதித் திடும்பொருள்,
முடிவில் வர்த்தித் தாசீர்வாதம் பெறுவாம்.

## எங்கள் கருத்து

### தந்தை செல்வாவை நன்றியுடன் நினைவுகூருகிறோம்.

ஈழத்தமிழ் மக்களின் தனிப்பெருந்தலைவராகத் திகழ்ந்த தந்தை செல்வாவை, இன்று அன்புடன் நினைவுகூருகிறோம். அன்னாரின் 91 வது பிறந்த நாளை ஈழத் தமிழ்மக்கள் நன்றி தோய்ந்த உள்ளத்துடன் கடந்த வாரம் நினைவு கூர்ந்தனர். அவர், தமிழரின் அரசியல் வரலாற்றில் உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்து, நேர்மையும் கண்ணிய முமான அரசியல் வாழ்வை வாழ்ந்து, தமிழ் மக்கள் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து நிற்கச் செய்ததை நம்மால் மறக்கமுடியாது.

1947 ஆம் ஆண்டு முதல் இறுதிவரை, தந்தை செல்வா தமிழினத்தின் நலனுக்காகப் போராடினார். சிங்கள இனத்தை நேசித்தார். ஆனால், சிங்கள ஏகாதிபத்தியத்தை வெறுத்து எதிர்த்து நின்றார். நடாளுமன்றம் போய் ஓர் ஆண்டிற்குள் தமிழருக்குத் தமிழரசில் மாத்திரம்தான் விடிவு உண்டு என்று தீர்க்கதரிசனமாகக் கூறினார். கூட்டாட்சி, தேசிய ஐக்கியத்தைக் குலைக்காது என வாதாடி, 1948 இல் தமிழரசுக் கட்சியைத் துவக்கினார். 1956 இல் தமிழ் மக்கள் விழித்தெழுந்தனர். தங்கள் உண்மை நிலைமையை உணர்ந்தனர்.

இன்றைய தமிழ் மக்களின் நிலைமையை நாம் நோக்கும்போது தந்தை செல்வா, தமிழ் மக்களின் விடுதலைப் போரரட்டத்திற்காக வகுத்த அகிம்சை வழியைவிட்டு வேறு வழியை நாடியது, ஞானமான செயலல்ல என்பதே எமது கருத்தாகும். 'ஈழத்துக் காந்தி' என அனைவராலும் பாராட்டப்பட்ட தந்தை செல்வா, இறைவனின் சித்தத்தின் படியே செயலாற்றினார் என்பதை, அவரோடு பணியாற்றிய தமிழ்த் தலைவர்கள் உணரத் தவறினர். இதன் விளைவே இன்றைய சீர்குலைவு,

தம் வாழ்வின் இறுதிவரை தமிழரின் சதந்திரத்தையே இலட்சியமாகக் கொண்டு அயராது உழைத்த தந்தை செல்வாவின் அடிச்சுவடுகளைச் பின்பற்ற, நம் வாலிப சமுதாயம் முன்வருமா? நாம் செய்ய வேண்டிய முதற் செயல், தமிழ் மக்கள் நலனுக்காகப் பலவழிமுறைகளைப் பாவித்துப் போராடும் போராளிகளை ஒன்றுபடச்செய்தலே. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு.

தமிழ் பேசும் மக்கள் இழந்த உரிமைகளை, சமஷ்டி அமைப்பின் மூலம் பெறலாமென நினைத்து, பரந்த மனத்துடன் துவங்கிய இயக்கத்தின் கொள்கைகளை, தந்தை செல்வாவின் அரசியல் ஞானத்தை, அன்றிருந்த சிங்களத்தலைவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இந்தக் கொள்கையை வன்மையாக எதிர்த்தனர். அதனால், 1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் திகதி, நாடாளுமன்றத்தில், 'தனித்தமிழ் நாடு ஒன்றே தமிழருக்கு மாற்றுவழி,' என உறுதியாக எடுத்துக்கூறினார் தந்தை செல்வா அவர்கள், ஈழத் தமிழர்கள் இரண்டாம் தரக்குடி மக்களாக இந்நாட்டில் வாழ முடியாது என்பதே அவரின் கருத்தாகும்.

தமிழ் மக்களின் துன்பங்கள் தீர்ந்து விட்டன, என நாம் கூறுவதற்கு இடமில்லை. துன்பங்கள் தொடர்கின்றன. இன்னும் அதிக துன்பங்கள் ஏமாற்றங்கள் வரவிருக்கின்றன. பெரும்புயல் வீசும் என்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன. ஆகவே, கிறிஸ்தவர்களாகிய நாம் விசுவாசத்தில் தளர்ந்துவிடாமல், உயிரோடிருக்கும் ஆண்டவருடன் சேர்ந்து, மக்களின் நலனுக்காகச் செய்யப்படும் நற்பணிகளில் ஈடுபட்டு உழைப்போம் வாருங்கள் - சமாதானத்தை நிலை நாட்டும் பணிகளில் பங்கெடுப்போம்- வாருங்கள்.


புங்குடுதீவு —

தென் இந்தியத் திருச்சபையின்

தொழிற் கல்வி நிலையத்திற்கு ஆசிரியர்கள் தேவை.

1. தையல் ஆசிரியர்கள்.

2. சுருக்கெழுத்து — தட்டெழுத்து ஆசிரியர்கள்.
( தமிழ் )

3. சுருக்கெழுத்து — தட்டெழுத்து ஆசிரியர்கள்.
( ஆங்கிலம் )

அனுபவம் உள்ளோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி;- 15 - 04 - 1989.

நிர்வாகி,
குருமனை, புங்குடுதீவு


### சிலுவை உன்னை மீட்டுவிடும்.

(மெட்டு: தனிமையிலே இனிமைகாண முடியுமா?)

பல்லவி

சிலுவையிலே சிலுவையிலே
சிரத்தைத் தாழ்த்த முடியுமா? — நீ
சிசுவதுவாய்ப் பிறந்திடவே தெரியுமா ஆ... ஆ (சிலுவை)

சரணம்

1. மறுபடியும் பிறக்கவேண்டும் மனிதனென்றார் — அது
மார்க்க நிலை அடைந்திடவே புரியுமென்றார்
மனமிருந்தால் இவ்வுலகை வெறுத்துவிடு — நீ
மாண்புடைய யேசுவைத் தெரிந்து விடு (சிலுவை)

2. துணிவிருந்தால் துணையிருக்கும் தெரிந்துவிடு— ஒரு
தூதனவன் காத்திடுவான் புரிந்து விடு
ஒளியினிலே உனது வாழ்வைக் காட்டி விடு — ஓர்
சிலுவை உன்னை என்றும் மீட்டுவிடும். (சிலுவை)

மனுக்குலத்தின் இரட்சகரான எமது இயேசு கிறிஸ்து
உயிர்த்தெழுந்தார்!
"உயிர்ப்பும் உத்தானமும் நானே!"

## மாணவரும் முன்னேற்றமும்.

இன்றைய மாணவர்களே நாளைய நாட்டின் பிரஜைகள். இவர்களது திறமையும் உழைப்புமே நாட்டின் செல்வத்திற்கும் அத்திவாரமாகும். எனவே, இளமையிலே மாணவர்கள் தங்கள் கடமைகளை உணரல் வேண்டும்: உணர்ந்து அவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும். இளமையிலே தங்கள் கடமைகளை உணராத மாணவர்கள், வீட்டிற்கும் நாட்டிற்கும் பிரயோசன மற்றவர்களாகத் திகழ்வார்கள். அது மாத்திரமன்றி, சமூக விரோதக் குற்றச் செயல்களிலும் ஈடுபடுவார்கள்.

மாணவர்கள் தங்கள் முதற் கடமையாகக் கல்வியைக் கருத்துடன் கற்றல் வேண்டும்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்ற முதுமொழிக் கிணங்கத் தங்கள் கல்வியை ஐயமின்றிக் கற்றல் வேண்டும். ஆசிரியர்கள் பணிக்கும் கட்டளைகளை, சிரமேற்கொண்டு கற்றல வேண்டும். பின்பு கற்போம் என்று சோம்பலுடன் இருத்தல் கூடாது.

"பின்னை என்பதும் பிறகு என்பதும் இல்லை என்பதற்கறிகுறி" என்று நம்முன்னோர் கூறிப் போந்தனர். கற்ற கல்விக்கமைய மாணவர்கள் ஒழுகுதல் வேண்டும். கல்வியின் பயன் கடவுளை வணங்கல், இதனையே வள்ளுவர்.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனில்"
என்று கூறியுள்ளார்

கடவுள் பக்தியுள்ளவர்களே ஒழுக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். ஒழுக்கம் மிகப்பிரதானமானது.

மாணவர்கள் பெரியோரைக்கனம் பண்ணல், அடுத்த பெரும் கடமையாகக் கொள்ளவேண்டும். பெரியோரை மதித்து அவர்களது ஆசியைப் பெற்றால், நன்னிலை அடையலாம். இதனாலேயே,

"பெரியோரைக் கனம் பண்ணு" என்று கூறியுள்ளனர்.

மாணவர்கள் எச்சமயத்திலும் பொய்பேசல், களவெடுத்தல் போன்ற தீய வழிகளில் செல்லாதிருத்தல் வேண்டும். இதனால் அவர்கள் மனம் தூய்மையடையும்,விரத மனுட்டித்தல் வேண்டும். இது அவர்களுடைய பிரதான கடமையாகும். தீயபழக்கங்களில் ஒன்றையேனும் கடைப்பிடித்தால் மற்றையனவற்றையும் கடைப்பிடிக்க வேண்டி ஏற்படும். இதனால் மாணவ[illegible] முதலியன மாசு

மாணவர்கள் அடுத்ததாக, தங்கள் தாய் தந்தையரைப் பேணுதல் வேண்டும்.அவர்கட்குத் தேவையானவற்றைக் குறிப்பறிந்து செய்தல் வேண்டும். அவர்களது குற்றேவல்களைப் புறக்கணியாது செய்தல் வேண்டும். ஒவ்வொருவரும், தம் தாய் தந்தையரே கண்கண்ட தெய்வமெனப்போற்றல் வேண்டும்.

வீட்டுக்கடமைகளுடன், தமது கிரரமத்திற்கும் தம்மாலியன்ற சேவைகளைச் செய்தல் வேண்டும். கிராம மக்களால் கிராமத்தில் கைக்கொள்ளப்படும. சிரமதான இயக்கங்களில் பங்கு கொள்ள வேண்டும். கிராம முன்னேற்றச் சங்கம், இளம் விவசாயிகள் கழகம் முதலியனவற்றில் பங்கு கொண்டு தொண்டாற்றவேண்டும். இவ்விதம் எல்லா மாணவரும் விடு, கிராமம், பாடசாலை முதலியனவறறில் தங்கள் கடமைகளைச் செய்வராயின் நாடு நலமுடன் பிரகாசிக்கும்.

( 2ம் பக்கத் தொடர்ச்சி )

ஒழுக்கங்கெட்ட காரியங்களுக்குத், தம் பிரசன்னத்தால் ஊக்கமளிப்பதுமில்லை, ஒழுங்கீனங்களுக்குச் சாட்சியாக இருக்க அவர் துணிவதுமில்லை. உலகத்துக்கு அவர் ஒளியாய் இருக்கவேண்டியது இப்பண்புகளால்தான். இப்பண்புகளில்லாமல் அவர், தமக்கு ஒப்புவிக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவுபெறச் செய்ய முடியாது. தம் ஆடுகளுக்காகத் தம் உயிரையே அவர் கொடுக்கவேண்டியதும் இவ்வாறே.

— தோமஸ் வில்சன்.

### சுவை குன்றாத வாழ்வு.

அட்டாலும் பால்சுவையின்
குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார்
நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கண்
மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.
— (வாக்குண்டாம்)

பொழிப்புரை:

பாலானது தன்னைக் காய்ச்சினாலும் தன் மதுரமான சுவையிற் குறையாது, சுவைமிகும். சங்கானது தன்னை நீறாகச் சுட்டாலும் மிகுந்த வெள்ளை நிறத்தையே கொடுக்கும். அதுபோல, மேன் மக்கள் கெட்டாலும், அவர்களின் நண்பர்களினால் தாக்கப்பட்டாலும், தம்முடைய நற்குணம் வேறுபடாமல், மேலோராகவே விளங்குவர். நட்பு இல்லாத கீழோர், தம்முடன் ஒருவர் கலந்து சினேகிதாலும் நண்பராக மாட்டார்கள். அவர்கள் நற்பண்பு அற்றவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Editorial*

## THE BEGINNINGS OF INDUSTRIAL EDUCATION IN THE NORTH.

The year was 1878. The scene was Tellippalai, a pioneer American Mission outpost, where Rev. T. S. Smith and Mrs. Smith had been sent by the Mission to replace Rev. W. W. Howland and Mrs. Howland who were moving to Uduvil.

The recommendations of the first ever American Board Deputation, the Anderson - Thomson Deputation, had rung the death knell on English and with it, on the Batticotta Seminary.

Two pioneer American Missionaries who could not survive the impact on them of this cyclonic administrative fiat, was Dr Daniel Poor who passed away in Jaffna in 1855, while the members of the Deputation were still in Bombay and Rev. Marshall D. Sanders who died later in August 1871, but with the satisfaction that he had worked hard to secure for Jaffn College a Board of Trustees in America, strong enough to help the community in Jaffna to re-build Jaffna College, on the ashes of the old seminary, when the time is opportune.

In the meanwhile the Training and Theological Institution established in 1859 to train mission assistants did not meet with success, despite an eminent Principal, Rev. M. D. Sanders and a loyal staff. For the Batticotta Seminary was the highpoint in Education of the pioneer missionary efforts - Any other substitute then. was anti-climatic and bound to fail.

It was in this grim scenario, that Rev. T. S. Smith conceived the idea of launching out into the uncharted sea of Technical Education witn the nucleus of the teacher - training Institution at Tellippalai where there was also residential facilities for students.

While Jaffna College (established in July 1872) re commenced forging ahead with its academic orientation, Rev. T. S. Smith put his heart and soul into his *Industrial Enterprise* in Education with the material he had at Tellippalai, a mature group of young men who took up to the courses he offered them with alacrity and a sense of mission, to make society the better for the all - round training they received.

Rev. T. S. Smith's efforts paid good dividends. The School he started was recognised for government grant in 1884. His first batch of nine pupils, when they took up work in village schools, became an influence for good in the village. One of them, Allen Abraham was even catapulated to fame when he traced the path of the Haley's Comet, a task in which he was pitted against some of the Astronomers of international repute.

SANDERS HALL built at Tellippalai in August 1884 (to commemorate the first Principal of the Training School) was built largely out of the toil of the students who had acquired enough proficiency in masonry and carpentry to make the building a work of their own hands, pushed forward during vacations and "Industrial days of term time".

The 25th Anniversary Celebrations in 1884, when the Hall was ceremoniously declared open by the Governor of Ceylon' Sir Arther Hamilton Gordon and an Industrial Exhibition held was a red - letter event in mission annals. It was on that day that *Mr. C. K. Yesuthasan* was introduced to the Governor, as the product of the Industrial School who has been selected by the Mission to proceed to the U. S. to obtain further training in printing. The governor promised to meet the travel expenses of Mr. Yesuthasan and also the freight expenses for the machinery that he intended to bring with him, to equip theMission Printing Establishment.

On his return in 1888 from America, Mr. Yesuthason installed the machinery he had brought with him after his period of training at the Institute of Technology at Worcester, Massachusetts. He named the Press, the Gordon Industrial Press after his benefactor and became its first national superintendent.

It was the Rev. J. H. Dickson (1900—1918) Missionary at Tellippalai who later amalgamated the original Garrett Press (1820) bought over from "Strong and Ashbury" and the Gordon Industrial Press into one unit — the American Ceylon Mission Press. The Mission Press saw much of its growth under Rev. J. H. Dickson and Mr. C. K. Yesuthasan.

The later vicissitudes through which the Press passed does not concern us here as our task in this column is to focus on the work of the *pioneers* who left us a large heritage in Education, Health, and technical know-how which it is left to us to build on.

"An Institution", it is said "is the lengthening shadow of a man". For many years the institutions at Tellippalai, the A. C. M. Press, the Workshop, the retail Sales centre at the entrance called the A. C. M. Book Depot, remained the "lengthening shadow" of *Rev. T. S. Smith*, the pioneer. He went on furlough in 1987 hoping to return. He died in America on December 17, 1901.

It was his colleague, the Rev. W. W. Howland when the Rev. T. S Smith succeeded in 1878 who has given us this picture of Rev. T. S. Smith:-

"Whether preaching in the street, or the Church, organising schools or Churches, editing a paper or superintending the printing, raising money or putting up a building, training teachers or preachers, he was always ready and efficient."

We have now a Press which we have named "The American Ceylon Mission Press". It is not the original Garrett Press brought to the country in 1820. It is not the Gordon Industrial Press of Mr. C. K. Yesuthasan or Missionary J. H. Dickson's amalgam which he named the A.C.M. Press.

But all the same it is a Press symbolising our ineradicable debt to the Pioneers who made it possible for us to have a Press of our own and to print in our Press The Morning Star — the second oldest newspaper in the Country.

## A SERVICE OF THANKSGIVING



*In memory of*

**Mrs. ELIZEBETH JEYARANI VIJAYATHASON**

(Nursery Teacher, — Udduppiddy C. S. I. Church)

and

**Mrs, JOYCE ATHISAYARANI THAVARASA,**

(Nursery Teacher — Udippiddy C. S. I. Church)

**who passed away on 15-02-1989, will be held at their residence at Yarl Veethy, Uduppiddy on 13-04-1984 Thursday, at 9-00 a. m.**

ALL ARE WELCOME.

Mrs. M. N. Veeravahu. *(Mother)*

Mr. T. Vijayathason. *(Husband of the Late Elizebeth Jeyarani)*

Mr. S. Thavarasa. *(Husband of the Late Joyce Athisayarani)*

*Brothers*:

Mr. V. G. Kanagasingam. **Mr. V. G. Balasingam.**

The Rev. V. N. Tharmakulasingam. Mr. V. J. Rajasingam.


## JAFFNA COLLEGE,

Vaddukoddai.

**VACANCIES.**

1. Graduate Teacher — To teach Maths in the (G. C. E.) O/L classes and G. C. E. (A/L) classes.
2. Graduate Teacher — To teach Tamil in the G. C. E. (O/L) and G. C. E. (A. L.) classes,
3. Art Teacher — To teach art in the midde School and G. C. E. (O. L.) classes.
4. Librarian — (Persons who have an aptitude for Librarianship with intentions of qualifying later also may apply.)
5. Head Master: — To take charge of Jaffna College Branch School at Paranthan. (recently retired persons also may apply)

Apply stating age, Qualifications and Experience.

**APPLICATIONS CLOSE ON 2-5-89.**

**Principal,**
*Jaffna College,*
*Vaddukoddai.*


Registered as a News paper at the G. P. O., Sri Lanka under No. Q/J/104/News /89

Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182, 1st, Cross Street Jaffna on Friday 7 April 1989. and published by Rev. T. THEVANESAN, 182. First Cross Street, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org